தென்னகம்

ஆசிரியர்: K.A.மதியழகன்

மலர் – 1 | 13 – 11 – 59 வெள்ளி | இதழ் – 43

இமயமலைச்சாரலிலே 'ஜவஹர்லால்' – 'பிரதமர் நேரு' சந்திப்பு!

K.A.மதியழகன்

இடம்: இமயமலைச்சாரல் குளுகுளு நகரம்.

காலம்: (14 நவம்பர் 1959)

[நேருவின் எழுபதாவது பிறந்த தினம். நேரு அலுப்புடன் காணப்படுகிறார். வழக்கம் போல் அவரது மிடுக்கான உடை. அங்கியில் ரோஜாப் பூ. கண்ணுக்கெட்டிய தூரம் இமயவெளி வெள்ளி முலாம் பூசித் திகழ்கிறது. சூரியனின் கதிரொளியைக் காணோம். நாலா பக்கங்களிலும் மேகங்கள் சூழ்ந்துள்ளன. நேருவின் முகத்திலும் சஞ்சல மேகங்கள். இரு புருவங்களும் ஒன்றோடொன்று மோதுகின்றன. ஓர் இளைஞன் பிரவேசிக்கின்றான்.]

இளைஞர்: நமஸ்தே! பண்டிட்ஜி!

நேரு: யார், தம்பி! ஜன சமுத்திரத்திடையேயிருந்து தப்பி வந்திருக்கிறேன். இருந்தாலும் நீ பிடிவாதக்காரன் போல் தோன்றுகிறது. எபபடியும் பிறந்ததின வாழ்த்து தெரிவித்து வருவது என்று பின்தொடர்ந்துள்ளாய் போல் தோன்றுகிறது. பரவாயில்லை! ஏதாவது வாலிப சங்கத்தின் காரியதரிசியா? உன் வாலிபர் சங்கத்திற்கு என் வாழ்த்து உரித்தாகட்டும். வாலிபர்கள்தான் நவ பாரதத்தை உருவாக்கவேண்டியவர்கள். ஒருநாளும் இந்தியா தாழ்ச்சியுற அனுமதிக்கக் கூடாது.

இளைஞர்: பண்டிட்ஜி! நான் நினைத்ததில் பழுதில்லை. நீங்கள் என்னை மறந்துவிட்டீர்கள்! உங்களுக்கு எத்தனையோ கவலைகள். இப்போது கூட சௌ – என் – லாயிக்கு எழுதிய அல்ல[illegible]ழுதவேண்டிய கடித[illegible]வாசகங்களை ஞாபகப் படுத்திக்கொண்டிருப்பீர். என் நினைவு உங்களுக்கு எங்கே இருக்கப்போகிறது?

நேரு: என்ன, தம்பி! நீ யாரென்றே தெரியாது.

இளைஞர்: என்னை உங்களுககு யாரென்றே தெரியாது அப்படித்தானே?

நேரு: நான் உன்னை ஒரு முறைகூட பார்த்தறியேன்.

இளைஞர்: பரவாயில்லை!

நேரு: நீயாரென்றேசொல்லவில்லையே, தம்பி!

இளைஞர்: சொன்னால்மட்டும் உங்கள் நினைவில் தங்கியாவிடப்போகிறேன்!

நேரு: சொல், தம்பி!

இளைஞர்: ஆச்சரியப்படாதீர்கள்! என் பெயர் ஜவஹர்லால்.

நேரு: அப்படியா! மிக்க சந்தோஷம்! உன் தந்தை யார் பெயர்?

இளைஞர்: தந்தையார் பெயர் மோதிலால் நேரு!

நேரு: வேடிக்கையாகவும் இருக்கிறது; விசித்திரமாகவும் இருக்கிறது. உன் பெயர் ஜவஹர்லால், உன் தந்தையின் பெயர் மோதிலால் நேரு ஒரு வேளை நீ எனக்கு உறவு முறையோ?

இளைஞர்: நான் உங்களுக்கு உறவினன் அல்ல!

நேரு: என்ன, தம்பி! நிறுத்திவிட்டாய்! யார் நீ! உனக்கு என்ன வேண்டும்? என்னிடம் வந்த காரணம்?

இளைஞர்: நான் நீங்கள் என்ற பேதமில்லை. நான்தான் நீங்கள்!

நேரு: தம்பி! இமயமலை சாது சன்யாசிக் கூட்டத்தைப் போல் ஆன்ம ஞானம் பேசுகிறாய். உடல் வேறானாலும் ஆத்மா ஒன்று, அதற்கு உருவம் கிடையாது. அழிவு கிடையாது என்கிறாயே இந்த ஆத்ம விசாரணை எல்லாம் எனக்கு பிடிக்காத விஷயங்கள் தெரிகிறதா,

இளைஞர்: தெரிந்து எனக்கென்னபலன்? நீங்கள் என்னை மறந்துவிட்டீர்களே!

நேரு: சாதாரணமாய் படபடத்த சுபாவம் எனக்கு. ஆனால் உன்னைக் கண்டது முதல் ஏதோ ஒரு காந்தக் கவர்ச்சி. உட்கார் தம்பி! நெடு நேரமாய் நின்றுகொண்டிருக்கிறாய்.

இளைஞர்: (உட்கார்ந்துக்கொண்டு) நன்றி! பண்டிட்ஜி!

நேரு: நீ, பண்டிட்ஜி! என்று என்னை அழைக்க வேண்டியதில்லை.

இளைஞர்: அந்தஸ்தில் உயர்ந்துள்ளீர்! ஒரு வேளை நான் "பண்டிட்ஜி" என்று அழைக்காவிட்டால் அடங்காப்பிடாரி, ஆணவக்காரன் என்றெல்லாம் கருதிவிடுவீர்களோ என்ற அச்சம்எனக்கு! அது மட்டுமல்ல, நான்தான் நீங்களென்றாலும், என்னைவிட நீங்கள் முதியவர். வயதுக்கேற்ற மரியாதைதானே முறை.

நேரு: நிஜமாகவே நீதான் ஜவஹர்லாலா? நீதான் நானா?

இளைஞர்: (உறுதியுடன், கணீரென்ற குரலில்) ஆம்! நான்தான் ஜவஹர்லால்!

நேரு: ஜவஹர்லால்! நீ என்னிடம் என்ன பேச வந்தாய்?

ஜவஹர்: தங்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துக்கூறிச் செல்ல வந்தேன். ஆனால் பழைய மனிதர்கள், பழைய பொருள்கள், உங்களுக்குத்தான் நினைவிருப்பதில்லையே!

நேரு: ஆமாம்! எப்போதும் எனக்கு வேலைப்பளு! ஓய்வேது? ஒழிச்சலேது? அத்தோடு காலம் மாறுகிறது. காலத்தோடு நாமும் மாற வேண்டும். இல்லாவிட்டால் சாக்கடைதான்! முன்னேற்றம் என்பது பூஜ்யமாகிவிடும்.

ஜவஹர்: மன்னிக்கவேண்டுகிறேன். உங்களிடம் முரண்பாடுகள் மிகவும் மலிந்துவிட்டன. அடிக்கடிவிட்டுக்கொடுக்கிறீர்கள். பழைய செயல் வீரரை நான் பார்க்கவே முடியவில்லை.

நேரு: நான்சன்ஸ்! உன்னைப் போன்றவர்களுக்கு அப்படி பேசுவது சுலபம். நான் இருக்கும் பதவியில் நீ இருந்தால் தெரிந்திருக்கும்! இந்தியாவிற்கு மட்டுமல்ல உலகிற்கே இப்போது ஒரு பெரும் நெருக்கடி சூழ்ந்துள்ளது.

(8–ம் பக்கம் பார்க்க)

"தங்கநீகா!" – தளை அறுபடுமா?

க.இராசாராம் பி.ஏ.

'உஹ்ரு' – 'விடுதலை' வேண்டும் என்ற முழக்கம் இன்று ஆப்பிரிக்க நாட்டின் பல பகுதிகளிலும் கேட்கும் ஒன்றாக இருக்கின்றது. இதே போன்ற முழக்கத்தை ஆப்பிரிக்கக்கண்டத்தின் விடுதலை பெற்ற நாடுகளான, கினியாவும், கனாவும் முழங்கிக் கொண்டிருந்தன. அவைகள் விரும்பியபடியே விடுதலையும் பெற்றன. அந்த நாடுகள் நடைபோட்டுச் சென்ற வழியிலேயே மற்ற ஆப்பிரிக்க மக்களும் நடைபோட ஆரம்பித்துள்ளனர்.

சின்னஞ்சிறு நாடுகள் என்று சொல்லத் தகுந்த நாடுகள் அனைத்தும் இதே முழக்கத்தை முழங்கத் தொடங்கிவிட்டன. அந்தக்கண்டத்தின் மூலைமுடுக்குகளில் உள்ள நாடுகள் அனைத்தும், வேக, வேகமாக விடுதலை ஆர்வம் பெறத் தொடங்கிவிட்டன.

பிரிட்டிஷ் ஆதிபத்தியத்தின் கீழ் இருந்து வரும் பல நாடு நாடுகள் விரைவில் விடுதலை பெற இருக்கின்றன. இந்த ஆண்டு நைஜீரியாவுக்கும் மெதுவாக, தங்க நீகாவுக்கும் விடுதலைத் தருவதாக பிரிட்டன் வாக்களித்துள்ளது.

ஆப்பிரிக்கக் கண்டத்தின் கிழக்குப் பகுதியில் கென்யாவுக்குத் தெற்கேயும், நயாசாலந்திற்கு வடக்கேயும், பெல்ஜியன் காங்கோவிற்கு கிழக்கேயும் உள்ள சிறிய காடுகள் அடர்ந்த நிலப்பகுதிதான் 'தங்க நீகா' என்கிற பிரதேசமாகும். இதன் கிழக்கெல்லையாக, இந்துமகா சமுத்திரம் அமைந்துள்ளது.

தங்க நீகா நாட்டை தட்டி எழுப்பியவர் மிக, மிகச் சாதாரணமானவர். சிரித்த முகத்துடன், தந்தப் பிடிபோட்ட கருப்பு கைத்தடியுடன் அவர் நடை பயில்வதை அந்த நாட்டு மக்கள் அடிக்கடி கண்டு வருகின்றனர். அவரது எளியதோற்றமும், சலியாத உழைப்பும் அந்த மக்களை விடுதலைக் கிளர்ச்சிக்குத் தயாராக்கியுள்ளது என்று கூறினால் மிகையாகாது.

ஜூலியஸ் நியர்ரீ, என்றஅவர் சிறுவயதில் இங்கிலாந்து நாட்டின், எடின்பர்க் பல்கலைக் கழகத்தில பயிலும்போதே, நல்ல ஒழுக்கத்தையும், சிறந்த பழக்கங்களையும் நன்கு கடைபிடித்து வந்தவராவார். படிப்பு முடிந்து தமது தாயகம் திரும்பியதும் அவர் புகு என்ற ஊரில் உள்ள கத்தோலிக்கப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார். தான் ஆசிரியராகப் பணியாற்றும் போதே, தினசரி மாலை வேளைகளில் பதின்மூன்று மைல்கள், பசுமரக் காடுகளினிடையே நடந்து சென்று அரசியல்கூட்டங்களில் கலந்து கொள்வதும் வாடிக்கையாக இருந்தது.

இந்த விந்தை மனிதர் நடப்பதில் சளைத்ததே கிடையாது. மக்களைத் தட்டியெழுப்பும் ஆர்வம் அவரைத் தினசரி பல மைல்கள் நடக்கும் படித்தூண்டிற்று. அவர் பசுமரக் காடுகளிடையே ஒவ்வொரு அடியெடுத்து வைக்கும் போதும், மக்கள் அவரது வழி நடக்கத் தங்களது பாதங்களை அவருடன் எடுத்து வைக்கத் தலைப்பட்டனர். அரசியலை அவர் மாணவர்கள் மத்தியில் எடுத்துரைத்தார். அந்த நாடு விடுதலையடைய வேண்டியதன் அவசியத்தை அனைவரிடமும் வலியுறுத்தினார். எளிமையான தோற்றமும், கடுமையான உழைப்பும் அவரை அந்த நாட்டிற்கு அறிமுகப் படுத்திற்று. சாதாரண ஆசிரியராக இருந்து கொண்டே தன் நாட்டு மக்களைத் தட்டியெழுப்பும் வேலையில், அமைதியாக, ஆனால் அவர்கள் மனதில் எண்ணங்களை ஆழப்பதியும்வண்ணம் எடுத்துச் சொல்லி. தன்பால் லட்சக்கணக்கான மக்களை வசப்படுத்தினார்.

அறியாமையிலும், அநாகரீகத்திலும், வறுமையிலும் மூழ்கிக் கிடந்தமக்கள் இவர் பாதையிலே வளம் காணமுடியும் என்று நம்பினர். இவர்வகுத்த வழியிலேயே நடக்கத் தலைப்பட்டனர். அதன் விளைவுதான் அவர் தங்கநீகாவில் உள்ள ஏராளமான மாணவர்கள் இவரது பள்ளியில் பயிற்சிபெறத் தொடங்கினார்கள். இந்தப் பள்ளியின் ஆரம்பக் கட்டத்தில் ஒரு மாணவன் பஸ்ஸை தவற விட்டதன் விளைவாக ஏறக்குறைய தொண்ணூறு மைல்கள் நடந்து சென்றுதன் ஊரை, ஒரு மாதம் கழித்துச் சேர்ந்தான் என்று சொல்லத்தக்க வரலாறு இந்த இயக்கத்திற்கு உண்டு.

1954-ம் ஆண்டு தங்கநீகா ஆப்பிரிக்கர் தேசியக் கழகம் என்ற அரசியல் நிறுவனத்தை ஜூலியர் ஏற்ப்படுத்தினார். இதை ஏற்பாடு செய்தபோது அவருக்கு ஆசிரியத் தொழிலைவிட்டுவிடும்எண்ணமே ஏற்படவில்லை. அவர் அரசியலின் நிலையற்ற தன்மையை எண்ணி, ஆசிரியத் தொழிலில் இருந்து கொண்டே, இந்தஇயக்கத்தைத் தோற்றுவித்தார்கள். நாட்கள் செல்லச்செல்ல, அரசியலில் ஏற்பட்ட வேலை மிகுதியின் காரணமாக அவர் தமக்கு விருப்பமான ஆசிரியத் தொழிலை தொடர்ந்து நடத்த [illegible]வில்லை. இவரது திறமைகளைப் [illegible]றிந்த பிரிட்டிஷ் கவர்னர் [illegible]இவரை அரசியலில் இருந்து பிரிக்கும்முறையில், நல்லதொரு பதவியை இவருக்கு அளிக்க முன் வந்தார்கள். ஐந்து குழந்தைகளைக் கொண்ட பெரிய குடும்பமான ஜூலியஸ் இதில் எந்த விதமான சபலத்திற்கும் ஆட்படாமல் அந்தப் பெரும் பதவியை ஏற்க மறுத்தார்.

தனனுடைய நாட்டு மக்களுக்கு விடுதலை வாங்கித் தருவதுதான் தனது முதல் வேலை என்ற எண்ணத்திலேயே சற்றும் அயராது பணியாற்றி வந்தார் தங்கநீகா ஆப்பிரிக்கா தேசீயக்கழகம் இவரது உழைப்பால், நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமாக வளர்ந்தது. இதில் ஏராளமான இளைஞர்கள் விரும்பி அங்கத்தினரானார்கள். இன்றை தினம் ஆறு ஷில்லிங் ஆண்டுச் சந்தா வைக்கட்டிக் கொண்டு எட்டு லட்சம் அங்கத்தினர்கள் அந்த இயக்கத்தில் சேர்ந்துள்ளார்கள். அந்த இயக்கத்தில் சேரும் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் இரண்டு ஷில்லிங் நுழைவுக் கட்டணம் வேறு வசூலிக்கின்றார்கள். இவ்வளவு பெரிய, எட்டு லட்சம் அங்கத்தினரைக் கொண்ட இயக்கத்தின் தலைவரான ஜூலியஸ் நியர்ரீ, இன்னமும் காரில்லாமலும், சிறிய வாடகை வீட்டிலும் வாழ்ந்து வருகின்றார்.

அவரது இயக்கம் வளர்ந்த அளவுக்கு, அதன் நிதியும் வளர்ந்தது. எந்தவிதமான பெரிய போக்கு வரவு சாதனங்களும், செய்தி நிறுவனங்களும் 'இல்லாத பகுதியில் இப்படிப்பட்ட இயக்கத்தை மிகவும் நல்ல முறையில் நடத்தி வருகின்றார். இதன் நிதியைத் தவறாகப் பயன்படுத்துபவரை, உடனடியாகப் போலீஸில் ஒப்படைத்து தகுந்த தண்டனையையும் இந்தத் தலைவரே முன்னின்று வாங்கியும் தந்துவிடுகின்றார். இந்த இயக்கத்தின் வளர்ச்சியைக் குறைப்பதற்காக இந்தப் பகுதியை நிர்வகித்து வந்த கவர்னரான வின்னிங் பிரபு பெரு முயற்சி எடுத்துக்கொண்டார். தங்க நீகா ஆப்பிரிக்கர் தேசிய கழகத்தின் எதிர்க்கட்சியான தங்கநீகா கூட்டுக் கட்சியினரை, கவர்னர் மிகவும் பாராட்டி வளர்க்க முயன்றார். அதைப்பற்றி எந்த விதமான கவலையும் இல்லாமல் தனது பணியிலேயே ஜூலியஸ் ஈடுபாடு கொண்டிருந்தார். இந்த கவர்னரின் காலம் முடிந்துக் கென்யாவிலிருந்து சர். ரீச்சர்ட் டர்ன்புல் கவர்னராக நியமிக்கப்பட்டார்.

அவர் கென்யாவில் இருந்த போது கையாண்ட முறைகளை அறிந்த தங்கநீகர்கள் தங்களது வெறுப்பை கண்டனத்தின் மூலம் வெளிப்படுத்திக்கொண்டார்கள். புது கவர்னர் வந்த போது ஜூலியஸ் தேசத்துரோகக் குற்றம் சாட்டப்பட்டு, அபராதம், அல்லது சிறை என்று

(6-ம் பக்கம் பார்க்க)

"நக்கீரன்"

ஆசிரியர்: அ. செல்வராசன்

ஆண்டு நிறைவு விழா சிறப்பிதழ்
15-11-59-ல் வெளிவருகிறது

★

அறிஞர் அண்ணா,
நாவலர். நெடுஞ்செழியன், கவிஞர். கண்ணதாசன்,
க. அன்பழகன், கலைஞர். மு. கருணாநிதி, கே. ஏ. மதியழகன்,
முரசொலி மாறன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, என். வி. நடராசன்,
இராதாமணாளன், எஸ்.எஸ்.இராசேந்திரன், எம்.ஜி.இராமசந்திரன்,
கி. ஆ. பெ. விசுவநாதம், கா. அப்பாத்துரையார்,
டாக்டர். இராசமாணிக்கனார் ஆகியோரின்
எண்ணத்தைக் கிளறும்
வண்ண எழுத்தோவியங்கள் இடம்பெறுகின்றன
அதிக பக்கங்களுடன் விலை 13 காசு

★

விபரங்கட்கு.
77, ஜெனரல் பீட்டர்ஸ் ரோடு, சென்னை-2.



மலர் 1] [இதழ் 43

"சந்தா" காட்டும் சவக்குழி !

குமரிமுனை முதல் இமாலயத் தொடர் வரை ஒன்றாக்கப் பட்டிருக்கும் இந்த "ஏக இந்தியா"வை ஏற்படுத்தியது யார்?

முற்றிலும் வெவ்வேறான இனங்களையும், மொழிகளையும் கொண்ட இந்த உபகண்டம் ஒன்றாக டெல்லி ஆட்சியின் கீழ் இருக்கும் காரணமென்ன ?

கலாச்சாரம், பண்பாடு, பழக்க வழக்கம், உணவு. உடை, இவைகள் எதிலும் கொஞ்சம்கூட ஒருமைப்பாடு கிடையாது என்பது மாத்திரமில்லை; நேர் எதிரான முறையில் ஒவ்வொரு இனமும் வாழ்கின்றன !

இருந்தும் இந்த உபகண்டம் ஓர்குடைகீழ் ஆளப்படுகிறது !

இந்த விசித்திர அரசியல் சூழ்நிலைக்கு காரணம் வெள்ளைக்காரன் என்பதை நாம் ஞாபகப்படுத்தத் தேவையில்லை. வியாபாரம் செய்யவந்த ஆங்கிலேயன் நாட்டையே கைப்பற்றி தன் சௌகரியத்திற்காக டெல்லியில் மத்திய அரசாங்கத்தை நிறுவி இந்த உபகண்டம் பூராவையும் ஆண்டு[illegible]ன்.

அவனை எதிர்த்து 'சுதந்திரம்' கோரிய[illegible]து வேறெந்த பிரச்னைகளும் சிந்திக்கப்படவில்லை. அந்நியனை நாட்டைவிட்டு துரத்த வேண்டும் என்ற ஒரே எண்ணமே எல்லோர் மனதிலும் வேரூன்றி நின்றது. சுதந்திரப் போராட்டங்களிலே இன மொழி கலாச்சார வேறுபாடுகளை மறந்து போராடினர்; ஹிட்லரை எதிர்ந்து நேசநாடுகள் போராடியதுபோல் !

வெற்றி கிட்டியது, ஆனால் வந்த சுதந்திரம் டெல்லியிலே தங்கிவிட்டது !

வெள்ளைக்காரன் ஏற்படுத்திவைத்த மத்தியஅரசாங்கமும் அதை நிலைநிறுத்த எழுப்பப்பட்ட மத்திய பாதுகாப்புப் படையும வந்த சுதந்திரத்தை சுவீகரித்துக் கொண்டன. அதன் தலைமைப் பீடத்திலே அமர்ந்த அரசியல் தலைவர்கள் வரலாற்றை புரட்டிப்பார்க்க மறுத்துவிட்டு 'ஏக இந்தியாவை பலப்படுத்துவதிலே ஈடுபட்டிருக்கின்றனர். இந்த முயற்சியின் எதிரொலியைத்தான் ஒவ்வொரு நாளும் நாம் காண்கிறோம்.

நாட்டை பிணைத்து வைத்திருக்கும் பெரிய பிடிப்பான மத்திய அரசாங்கத்தைப் பலப்படுத்த இரு பெரும் புள்ளிகள் சென்றவாரம் யோசனைகள் கூறி இருக்கின்றனர்.

ஒருவர் முன்னாள் உயர்நீதிமன்ற தலைமைநீதிபதியான திரு மகஜன். இவர், ராஜ்ய சட்டசபைகளும், மாநில சர்க்கார்களும் இந்திய ஒற்றுமைக்கு ஆபத்து என்றும் பலம் வாய்ந்த எல்லா அதிகாரமும் குவிக்கப்பெற்ற மத்திய சர்க்கார் மாத்திரம்தான் நாட்டிலே இருக்க வேண்டும்என்கிறார். தனித்தனி மாகாணங்கள் இருப்பதால்தான் குறுகிய எண்ணங்கள் வளருகிறது என்றும, டெல்லியில் ஒரு கட்சியும், மாகாணங்களில் வெவ்வேறுகட்சிகளும் பதவியேற்றால் ஏகஇந்தியா உடைந்துவிடும் என்றும் எச்சரிக்கிறார் !

இந்திய ஒற்றுமைக்கு யோசனை கூறிய மற்றொருவர் இன்றைய மத்திய ஆடிட்டர் ஜெனரல், திரு சந்தா அவர்கள். இவருடைய கூற்றுப் பிரகாரம், அகில இந்தியா நிலைக்க வேண்டுமானால், இன்றைக்கு பரவிவரும் குறுகிய நோக்கம் போகும்வகையில் எல்லாஇந்தியஅரசாங்கஊழியர்படைஅமைக்கப்படவேண்டுமாம்! மத்தியஅரசாங்கத்திற்கும், மாகாண அரசுகளுக்கும் பொதுவான ஒரே அதிகாரிகள் படை உருவானால் அவர்களை இந்திய உபகண்டத்தில் எந்த இடத்திற்கு வேண்டுமானாலும் மாற்றிப்போடலாம். அப்படி வேற்று மாநிலங்களுக்கு சேவைசெய்யப்போகும் அதிகாரிகள் குறுகிய மனப்பான்மையும், லஞ்ச நோக்கமுமின்றி சேவைபுரிவர். அப்படி செய்தால் இந்திய ஒற்றுமை வளர்ந்து ஏக இந்தியாவாக நிலைக்கும் ! எனபது சந்தாவின் வாதம்.

இப்படி அதிகாரத்தில் உயர்ந்த பதவிகளை அலங்கரித்த ஒருவரும், அமர்ந்திருக்கும் மற்றொருவரும் அரிய ஆராயச்சிகளை செய்திருக்கின்றனர் !

மாகாண அரசாங்கமே தேவையில்லை என்கிறார் ஒருவர்.

அரசாங்க அதிகாரிகள் சொந்த மாநிலங்களிலேயே சேவை செய்யக் கூடாது என்கிறார் மற்றொருவர்! இந்த இரு யோசனைகளையும் ஏற்றுக் கொண்டால் இந்த நாட்டின் கதி என்னவாகும் ?

தமிழ் ஆட்சி மொழி ஆவது நடவாத காரியமாகிவிடும். காரணம், நமதுஅரசாங்க மொழியை நிர்ணயிக்கும் அதிகாரம் நம்மிடம் இருக்காது என்பது மாத்திரமில்லை; நம்மை ஆளப் போவது வேற்று மாகாணத்து அதிகாரிகள் ! அவர்களின் நலனை முன்னிட்டு ஒரே மொழிக்கொள்கை இந்தியா முழுதுக்கும் அநுசரிக்கவேண்டிய நிலை ஏற்படும்.

நமது கலை, இலக்கியம், பண்பாடு இவைகளுக்கு மதிப்பிருக்காது - காரணம் நம்மை ஆளப்போகிறவர் வேற்று மாகாணத்தவர்கள் என்பது மாத்திரமில்லை நமது கலை,இலக்கியம், பண்பாடு இவைகள் எவையெவை வென்பதையும டெல்லிகார்தான் முடிவு செய்யும்.

ஹிந்தி மொழியும், ஆரியப் பண்பாடும், சமஸ்கிருத நாகரீகமும்தான் நமது பாரதம் என்று டெல்லி திட்டவட்டமாக முன்பே கூறிவிட்டது.

டெல்லிக்கும் தமிழ் நாட்டிற்கும் இரண்டாயிரம் மைல் தூரம். ஆகவே, இயற்கையாகவே, மத்திய அரசாங்கம், பஞ்சாப், உத்தர் பிரதேச மக்களிடமே போய்ச் சேரும். இப்போழுதே சென்று கொண்டிருக்கிறது ! ஆகவே மாகாண அரசுகள் கலைக்கப்பட்டு, மத்திய அரசாங்கம் நிறுவப்பட்ட் வெகு சில நாட்களில் வட இந்தியரின் முழு பிடியிலே நாடு குமரிமுனைவரை சிக்கும். அதே நேரத்தில் ஆடிட்டர் ஜெனரல் கூறுவதுபோல் எல்லா இந்திய அதிகாரிகள் வரிசையும் எழுப்பப்பட்டால், அது முழுக்க முழுக்க, வடஇந்தியர் களாலேயே ஆனதாகவே இருக்கும். இப்போழுது இருக்கும் பல மத்திய பதவிகளுக்கு தென்னிந்தியர் போக முடியாதவாறு, தூரம் குறுக்கே நிற்கிறது. மகஜன் கூறும் மத்திய அரசாங்கத்திலே சந்தா கூறும் எல்லா இந்திய அதிகாரிகள் வரிசையில் நிச்சயம் ஒரு தென்னிந்தியன் கூட இருக்க மாட்டான்.

இந்த சூழ்நிலையில் முன்பே நமக்கு தெரிந்ததுபோல், முழுக்க, முழுக்கலஞ்சஎண்ணமும், புத்திக்கூர்மையில் குறைவு மான வடஇந்தியர்கள் தென் மாநிலங்களை ஆண்டால் சில ஆண்டுகளில் என்ன நடக்கும் என்பதை நாம் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. நமது மொழி, கலாச்சாரம், பண்பு இவைகளுக்கு முற்றிலும் மாறானவர், வேற்றுஇனத்தவர்நமது மாநிலத்தை சூறையாட திட்டம் போட்டு இந்த இருயோசனைகளும் கூறப்பட்டதாக நாம் எழுதவில்லை. வரலாற்று அறிவில்லை என்று இந்த இருவரையும் கூறமுடியாது. இருந்தும் இவ்வளவு விஷமத் தனமான யோசனைகளை கூறும் காரணம் என்ன ?

மாற்றார்கள் வாழும் நாட்டை அடக்கி ஆள வேண்டும் என்ற ஏகாதிபத்திய எண்ணமா ?

டெல்லியில் இருப்பதால், தூரத்தில் இருக்கும் மக்களை மறந்த காரணமா ?

சொந்த மாநிலங்களுக்கும், மக்களுக்கும் வாழ்வு கிடைக்கும்போது, வசதிதேடிக் கொள்வோம் என்ற சுய நலமா ?

வெள்ளைக்காரன் கொடுத்துப்போன 'சுதந்திரம்' டெல்லியோடு நிலைக்காதோஎன்று ஏற்பட்ட கவலையா? அவர்களின்உள்நோக்கம எதுவோ, நாமறியோம் ஆனால் ஒன்றறிவோம் தேசியத் தோழர்கள் நமது மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு என்று நம்மிடம் கூறும்போது, அவர்கள் மனதில் ஆரியக்கலை, பாரதீய பண்பாடு சமஸ்கிருத மொழி இவைகளை மனதில் கொண்டு பேசுகின்றனர் என்பது ! அந்த எண்ணம் நிறைவேற, அவ்வப்போது கூறும் யோசனைகள்மேலே நாம் கண்டவை, இந்த எண்ணங்களையும், யோசனைகளையும் தாய் நாட்டை நேசிப்பவன் எவனும் ஒத்துக் கொள்ள முடியாது அது மாத்திரமில்லை, எதாவது ஒரு நேரத்தில் உயிரைப் பணயம் வைத்தாவது, முறியடிக்கப்பட வேண்டியவை !

கொங்குநாட்டு தீரன் சின்னமலை

K. A. மதியழகன்

விழி வாசல் வழிவந்து பேசுதே!

5

"அண்ணா! நான் எப்படி அந்த மாடிக்கு வந்தேன், அவ்வளவு உயரமான கட்டிடத்தை ஒரு நொடியில் தாவினேன் என்பதை இப்போது யோசித்துப் பார்த்தால்கூட எனக்கு விளங்கவில்லை.

சிறுவயதில் அரண்மனைப் பள்ளிக்கூடத்தில் நீங்களும் நானும் தமிழ் பயின்றபோது அரசன் மகள் அமராவதியைச் சந்திக்க கவிஞன் மகன் சாளரத்தின் வழியாக ஏறி அந்தப்புரம் சென்றான் என்பதை தமிழாசிரியர் உருக்கத்துடன் எடுத்துச் சொல்வாரே நினைவிருக்கிறதா, அண்ணா. அப்போதெல்லாம் அதிலே பொதிந்துள்ள பொருள் எனக்கு புரிந்ததில்லை. இது என்ன கோழைத்தனம்! இந்த களவு முறைகூடாது, நேர்மையாகப் பெறுவது என்று எண்ணிக் கொள்வேன். இன்னும்சில நேரங்களில் இதையெல்லாம் ஒழுங்காக நினைவுபடுத்திகேள்வி நேரத்திலே சொல்லித்தொலைக்க வேண்டுமே என்று வருத்தப்பட்டுக்கொள்வேன்.

உங்களுக்கு கவனமிருக்குமென்று கருதுகிறேன், நமது தமிழாசிரியருக்கு 'மிருச்சகடிகம்' என்றால் எவ்வளவு பிரியம் என்று. ஒருமுறை கேலியாக "தமிழ் அய்யாவின் திருநீறுப் பூச்சையும் சந்தனப் பொட்டையும் கண்டவர்கள் இந்த சைவத் திருமேனி மனதில் பொன்னார் மேனியனைத் தவிர வேறு சிந்தனையே இருக்காது. போக போக்கியங்களில் கற்பனைக்காக கருத்துச் செலுத்தும் ஆர்வம் கூட இராது என்றுதான் எவரும் எண்ணுவர். ஆனால் சாருதத்தன் வசந்தசேனை காதல் பிரதாபத்தை அவர் கூறும்போது — பொற்கொடி வசந்தசேனையின் அங்கலாவண்யங்களை விளக்கும்போது, வசந்தசேனையின் வெறிபிடித்த காதலன்கூட இவ்வளவு வர்ணித்திருப்பானா என்ற சந்தேகம் வருகிறது" என்று சொன்னீர்கள்! அப்போது நான் நினைத்ததெல்லாம்தமிழய்யாவை அன்பாக வேடிக்கை செய்வதில் அண்ணாவுக்கு அலாதி ஆவல் என்பதுதான். வசந்த சேனையும் சாருதத்தனும் என் மனதிலே பதிந்ததேயில்லை. ஓலை தீட்டும் இந்த நேரத்தில் உணர்கிறேன். இடியும் மின்னலும் பெருமழையும் அந்த காதலனை ஏதும் செய்யவில்லை. பாம்பை பசுங்கொடி என்றுகருதி அவன் மாடி மீது ஏறினான் என்பது கற்பனையாக இல்லாமல் நிகழ்ச்சியாய் இருந்தது என்று சொன்னாலும் நம்ப மறுக்க மாட்டேன்.

சேலையின் முன்தானை பற்றிக் கொண்டிருந்தது. அந்தப்பெண் பதறிப்போய் கால்களை அடித்துக்கொண்டு கரங்களை உதறிக் கொண்டிருந்தாள். இன்னும் ஒருகண நேரத்தில் அவள்மேனி முழுதும்பற்றியிருக்கும். யோசிப்பதற்கு நேரமில்லை. சரசரவென அவள் சேலையைப்பற்றி யிழுத்தேன். அந்த ஆபத்தான நேரத்திலும் புடவையைப் பற்றிக்கொண்டு போராடினாள். எனது முரட்டுத்தனத்தின் முன்பு அவள் நாணம் எவ்வளவு நேரம் சமாளிக்கும் பற்றியெரிந்துக் கொண்டிருந்த சேலை ஒரு ஓரத்திலே விழுந்தது. நெருப்பு தொடாந்து கொண்டிருந்தது. அதன்மேல் குதித்து கால்களால் தீயை அணைத்தேன்.

அதுவரையில் அவளை கவனிக்கவில்லை. திரும்பிப் பார்த்தேன். உள்ஆடையுடன் தரையிலே மூர்ச்சை போட்டுக் கிடந்தாள். சுற்றும் முற்றும் பார்த்தேன். எங்கும் நிசப்தம். மாடிக்கு வரும் படிக்கதவு மாடிப் பக்கம் சாத்தப்பட்டிருந்தது. இக்கட்டான நிலைமை புரிந்தது.

"அய்[illegible] அப்பா!" என்ற அபயக்குர[illegible]டு ஓடி வந்ததில் எவ்வள[illegible] ஆபத்தில் மாட்டிக் கொண்டேன் என்பதை யூகிக்க முடிந்தது. பத்துப் பேர் என்னை எதிர்பாராத விதமாய் தாக்கியிருந்தால்கூட அவ்வளவு பயந்திருக்க மாட்டேன். ஓடிவிடவும் முடியாது. உதவிசெய்யவும் தெரியவில்லை.

நல்லவேளையாக என் தோளிலே எப்போதும் இருக்கும் தோற் பையில் கொஞ்சம் தண்ணீர் இருந்தது. அதைத் திறந்துஅவள் முகத்திலே தெளித்தேன் பேச்சு மூச்சில்லை. எனக்கு சந்தேகம் வந்துவிட்டது. கீழே அமர்ந்து மெதுவாக முகத்தைத் தொட்டேன். என் கரங்கள் நடுங்கின. மூச்சு விடுவதை உணர்ந்தேன். சிறிது நிம்மதி பிறந்தது. அவள் முகத்தை அசையாமல் என்னிடமிருந்த மீதி தண்ணீரையும் முகத்தில் கொட்டினேன். அவள் கண் விழிப்பதற்கு சிறிது நேரமாயிற்று. உடம்பெல்லாம் வியர்த்திருந்தது. மிகவும் அதிர்ச்சியடைந்தவள்போல் காணப்பட்டாள். சுயநினைவு வந்ததும், யாரோமடியிலோ தலைபுதைந்திருப்பதை உணர்ந்து மீண்டும் தீ பற்றியவள்போல் திடீரென எழுந்திருக்க முயன்றாள் ஆனால்அவளின் அயர்வால் நினைத்ததைச் செய்யமுடியவில்லை. எங்கோ பார்த்தாள்.

"ஆபத்திற்கு தோஷமில்லை: பேசாமல் இரு. அலட்டிக் கொள்ளாதே!" என்றேன்.

கார்த்திகை சரவிளக்குச் சுட்டிகள் சில அவிந்து விட்டன. சில அணையும் தறுவாயில் பிரகாசமாக சுடர்விட்டுக் கொண்டிருந்தன. வேறுசில பரிதாபமாய் பார்ப்பதுபோல் குறுகிக்கொண்டிருந்தன. எதிர்பாராத இடத்தில், எதிர்பாராத சூழ்நிலையில் எதிர்பாராத பெண் என் மடியில் கிடக்கிறாள்! முற்றிலும் புதிதான இந்த அனுபவத்திற்கு தகுந்தாற்போல் எனக்கு நடக்கத்தெரியவில்லை. பெண்களுக்குமில்லாத அவ்வளவு வெட்கத்தைஎப்படிப் பெற்றேன் என்று தெரியவில்லை. உண்மையாய் சொல்லுகிறேன், அண்ணா, அதுவரையில் எந்தப் பெண்ணையும் நான் சரியாக உற்றுப் பார்த்தது கிடையாது. பெண்ணின் கவர்ச்சியை அன்றுதான் அறிந்துக் கொண்டேன். வாளிப்பான உடல், சுருண்ட கேசங்கள், இமைமூடியிருந்தும் சுடர்விடும் வதனம். ஒழுங்கின்றிபறந்துகிடந்தஆடை. அதற்குள்ளே ஒளியை உமிழ்ந்து கொண்டிருந்த அங்கங்களின் பூரிப்பு—எவ்வளவு நேரம் பார்த்துக் கொண்டிருந்தேன் என்று சரியாகச் சொல்லமுடியாது. பெண்ணின் ஸ்பரிசத்திற்கு எவ்வளவு சக்தியிருக்கிறதுஎன்பதை அன்றுதான் முதன் முறையாக உணர்ந்தேன்.

ஆரம்பத்தில் அவள் மூர்ச்சை தெளிய வேண்டும் என்று எவ்வளவு துடி துடித்தேனோ. அதற்கு நேர்மாறாக, ஆயுள் முழுதும் இப்படியே இவள் படுத்திருந்தால் கூட தாங்கி நிற்கலாம்போல் தோன்றியது. விவரிக்க முடியாத, இனந்தெரியாத ஓர் புத்துணர்வு என்னை ஆட்கொண்டது. அதுநாள்வரைஎன்னிடமிருந்துஒளிக்கப்பட்டு வைத்திருந்த இன்பப் பெட்டகத்தை உணர்ந்துகொண்டேன்.

மெல்ல கண் விழித்தாள். பிற ஆடவனின் மடிமீது தலைகிடக்கிறது என்பதாலே சாகத்தெரிந்தும் விடுவித்துகொள்ள இயலாதவள்போல் திண்டாடினாள். என்னைப்போன்றே அவளும் ஆணின் ஸ்பரிச சக்தியின் முன் கட்டுண்டு கிடந்தாள். நமது நந்தவனத்தோட்டத்தில் கிணற்றுவாரியருகே மனோரஞ்சிதச் செடி உண்டல்லவா? மனோரஞ்சத மலர்களின் கம்மென்று மணத்தின் சக்தியின் முன்பு சரு நாகமும் கட்டு விரியனும் செடியைச்

சுற்றி அசையாது படுத்திருப்பதை பலமுறை பார்த்திருக்கிறேன். எங்களில் யார் மனோரஞ்சிதமலர் என்ற விவாதத்தில் நான் இறங்கவில்லை. அப்படிப்பட்ட ஓர் கவர்ச்சி அங்கு ஆட்சி புரிந்தது.

திடீரென எழுந்து ஒதுங்கி நின்றாள். அவ்வளவு நேரம் நடந்தசெயல்களுக்குவெட்கப்படுவதுபோல அவள் முகமண்டலம் சிவந்திருந்தது. என்னை சரியாகக் கூட உற்றுப் பார்க்கவில்லை. வேறு எங்கெங்கோ அவள் கண்கள் அலைந்தன. கால் கட்டை விரலால் தரையை கீறினாள்.

‘ அப்பப்பா ! நினைத்தாலே பயமாக இருக்கிறது நீங்கள் மட்டும் வராதிருந்தால்......”

“ அமைதியாய் இருங்கள் அம்மணி ! இது என்ன பெரிய காரியம் ? அய்யோ ! அப்பா ! என்ற அபயக்குரல் கேட்கும்போது, அதுவும் தீப்பிழம்பின் மத்தியில் ஓர் அபலைப் பெண் ஆதரவற்றவளாக கதறும்போது எந்த ஆண்மகனும் நான்செய்ததையே தான் செய்திருப்பான் !”

தட்டுத்தடுமாறி பேசத் தொடங்கினாள். இப்போது அவள கொஞ்சம் தைரியத்தை வரவழைத்துக் கொண்டவள் போல் பேசினாள்.

“ உபசாரத்திற்காகச் சொல்கிறீர்கள். ஆணாகப் பிறந்த எல்லோருக்குமே, இந்த இரக்க சிந்தை வந்து விடுவதில்லை ”

“ அது கிடக்கட்டும், இப்படி அஜாக்கிரதையாய் விளக்கு வரிசை அருகே புடவைத் தலைப்பை விடலாமா ? உனது வேடிக்கை விசாரத்தில் அல்லவா முடிய இருந்தது ! ”

“ அதற்காக வருந்ததில்லை. இந்த ஆபத்து வந்ததினால் தானே ‘ நல்லவர் ’களை கண்டு கொள்ள முடிந்தது ”

“ அவ்வளவு விரைவில் நல்லவர்கள், கெட்டவர்கள் என்று முடிவு செய்து விடாதே ! நான் ‘நல்லவன்’ என்பது இந்த இரண்டு நாழிகையிலே விளங்கி விட்டதா ?”

“ ஆயிரம் யுகம் வேண்டுமாக்கும் ! அணங்குகளுக்கு அரைநொடி போதும் ஆண்களை தெரிந்து கொள்ள ?”

“ அப்படியென்ன தெரிந்து கொண்டாய் என்னைப் பற்றி ?”

“ ஊகூம் ! நான் சொல்லமாட்டேன் !”

“ சொல்லாமல், நீ தெரிந்து கொண்டாய் என்பதை நான் எப்படித் தெரிந்து கொள்வது?”

“எந்தகோட்டைக்கோ தளபதி குதிரை வீரர். பேச்சைப் பார்த்தால் நம்முடைய கொங்கு நாடு என்று தெரிகிறது ”

“ பரவாயில்லை ! பரிட்சையில் பாதி தேறிவிட்டாய் – ஆனால் முழுதும் சரியல்ல. நான் எந்த கோட்டைக்கும் தளபதியல்ல. சாதாரண குதிரை வீரன். அவ்வளவுதான், அதையும் எப்படி சொன்னாய் என்பது புரிகிறது. நான் தெருவிலே குதிரையில் வரும்போது பார்த்திருப்பாய் ! குதிரையிலே வருபவன் குதிரை வீரன் ! அப்படித்தானே !”

“ ஏன் இன்னும் கொஞ்சம் சொல்லுங்களேன். குதிரையிலே வரும்போது பார்த்திருப்பாள். அந்த ரம்மியமான காட்சியிலே லயித்திருப்பாள். புடவை தலைப்பையும் கவனிக்கவில்லை. அது நெருப்புடன் ஆலிங்கனம் செய்த காட்சியும் அவளுக்குத் தெரியவில்லை, என்று முடியுங்களேன் ”

“ சேச்சே ! அப்படிச் சொல்வதற்கு நான் ஒன்றும் அகம்பாவக் காரனல்ல ! ”

“ இதிலென்ன அகம்பாவமாம் ! உண்மை அதுதான் ! ”

“பெரிய கெட்டிகாரி போல் இருக்கிறது. ஏதோ உபகாரத்திற்கு வந்தால் இந்த உபத்திரவத்திற்கு நீதான்காரணம் என்று குற்றம் சாட்டுவாய் போல் தோன்றுகிறது.”

அதற்கு அவள் ஒன்றும் வாய் மொழிபேசவில்லை. மௌனம் நிலவியது. விழிவாசல் வழிவந்து பேசினாள்! அந்த சில விநாடிகளில் எவ்வளவோ பேசிவிட்டாள். உணர்வு வந்தவள் போல் தொடர்ந்து “ குதிரை வீரர் என்றீர். எந்தஊர், என்ன பேர் என்று சொல்லவில்லையே” என்றாள். எதிர்க்கேள்வி கேட்பதுபோல் “நீ மட்டும் யார் என்று சொன்னாயா? யாருடன் வந்தாய்? அவர்களெல்லாம் எங்கே? நீ மட்டும் தனியாக இங்கே மாடிமீது...” என்றேன்.

“என் வீட்டாருடன்தான் வந்தேன் அவர்களெல்லாம் அர்த்த கால பூஜைக்கு மலைமீது போயிருக்கிறார்கள். கூட்ட நெரிசலில் இவளை அழைத்து போகக் கூடாது, அறையிலேயே இரு, அம்மா என்று என்னை விட்டுச் சென்றார்கள்”

“இதுதான் அறையாக்கும் ”

“வேடிக்கை பேசுகிறீர்கள் ! அம்பலம் என்றுவைத்துக்கொள்ளுங்கள். கார்த்திகை தீபம் பார்க்க மாடிக்கு ஓடிவந்தேன் யாரும் ஆடவர்கள் வந்துவிடுவார்களோ என்று படிக்கதவை இப்பக்கம் தாளிட்டேன்” என்றாள்.

“அதற்கப்புறம்?” என்றேன்.

“ நீங்கள் சொன்னால்தான் ” என்றாள்.

நேரமாகி விட்டது மலையிலிருந்து பூஜை முடிந்து மக்கள் கலைந்துக்கொண்டிருந்தனர்தெருவில் மக்கள் சந்தடி கேட்டது. தாமதிக்க நேரமில்லை.

“ ஆனூர்க் கோட்டையில் வேலை!” என்றேன்.

“ எங்கள் பக்கம் தான் !” என்று குதித்தாள். படிக்கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. பயந்துவிட்டோம். அங்கிருப்பது நல்லதல்ல, காலையில் பார்த்துக் கொள்வோம் என்று கிளம்பினேன். வந்த வழியிலேயே இறங்கினேன்.

வேளாளர் மடத்தை அடுத்து நாம் வழக்கமாய் தங்கும் விடுதியை அடைந்ததும் என் உள்ளங்காலெல்லாம் தீபட்டு புண்ணாகி யிருப்பதை உணர்ந்தேன். படுக்கைக்குப் போனேன். மறுநாள் அவளைப்பற்றி மேலும் தெரிந்துகொள்ள மடத்திற்கு சென்றேன்: மடம் வெரிச்சென்றிருந்தது. அங்கே தங்கியிருந்த நாலைந்து குடும்பங்கள் விடியற் காலையே கிளம்பிவிட்டதாகச் சேதி கிடைத்தது. வேறு சரியான தகவல் அகப்படவில்லை. எனக்கும் விசாரிக்கும் துணிவில்லை, எப்படியும் அவளை கண்டுப்பிடித்துவிடுவேன் என்ற நம்பிக்கையில் ஊர் திரும்பினேன்.

அந்த அசட்டுத்தனம் தவறு என்று இப்போது புரிகிறது அண்ணா! நானும் தேடுகிறேன் தேடிக்கொண்டே யிருக்கிறேன் இன்னும் அவளைக்கண்டுபிடிக்க முடியவில்லை.

எப்படியோ அவள் என் நெஞ்சில் இடம் கொண்டுவிட்டாள். அவளை அங்கிருந்து அக்றறமுடியாது திண்டாடுகிறேன்.

களையெடுக்கும் குமரிக் கூட்டத்தைக்கண்டால், கிணற்றிலிருந்து தண்ணீர் மொண்டு செல்லும் தையலரைப் பார்த்தால், எங்காவது பெண்கள் சிரிப்பொலி கேட்டால் அவள் முகம் தெரியாதா என்று தேடுகிறேன்: இன்னும் அகப்பட்டாளில்லை, அண்ணா! இந்த பலவீனத்திற்காகஎன்னை மன்னித்து விடுங்கள். அவளைப் பெறுவிட்டால்என்வாழ்வுநிறைவுபெறுது. என்றும் தங்கள் சொல் தட்டாத தம்பிக்கு இந்த ஒரு அனுமதி வழங்குங்கள். அவள் எப்படியும் எனக்கு கிடைத்தே தீருவாள்.

முத்து வேலப்பரிடமே நாளை காலை சென்று மன்னிப்புக்கேட்க இருக்கிறேன். அத்துடன் தங்கள் திருமணம் நடைபெறுமல் நான் மணம் செய்வதாக இல்லை. எனக்குத்தான் பெண் கொடுப்பதாக அவர் சொல்லியிருக்க முடியாது. அண்ணன் சம்மதித்தால் அவருக்கும் உங்கள் மகளுக்கும் திருமணம் நடைபெறப் போவது உறுதி:என்று கூறிவர இருக்கிறேன் இப்படிக்குஉங்கள் அன்பு, பெரிய தம்பி ” என்று ஓலை முடிந்திருந்தது.

[தொடரும்]

★

விலைவாசிக் குறைப்பு சர்வகட்சிக்குழு

★

தி. மு. கழகக் கிளைகளுக்கு அறிவிப்பு

ஏழை - நடுத்தர வகுப்பு மக்களைப் பாதிக்கின்ற வகையில் உணவுப் பொருள்களின் விலைகள் ஏறியிருப்பதைக் கண்டிக்கவும், விலைகளை நியாயமான அளவுக்குக் குறைக்குமாறு அரசியலாருக்கு வற்புறுத்திக் கூறவும் விலைவாசிகள் குறைப்பு சர்வகட்சிக் குழு ஒன்று சென்னையில் அமைந்திருப்பதை அனைவரும் அறிவீர்கள்.

நவம்பர் 15–ஆம் நாள் முதல் 22–ஆம் நாள் வரையுள்ள நாட்களில் கண்டன ஊர்வலங்கள் நடத்தியும் விலைவாசிகளைக் குறைக்க அரசியலார் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வற்புறுத்த வேண்டும்என்று சர்வகட்சிக்குழு முடிவு செய்திருக்கிறது.

எனவே, மாநில அளவில்அமைந்துள்ள இந்த அமைப்பின் தொடர்பாக அந்தந்த மாவட்ட அளவில் குழுக்கள் அமைப்பதற்கு எடுத்துக்கொள்ளும் முயற்சிகளில், அந்தந்த மாவட்ட தி: மு. கழகச் செயலாளர்களும் தங்கள் தங்கள் ஒத்துழைப்புகளை அளிக்கக் கேட்டுக்கொள்கிறோம்.

கிளைக்கழகங்களைப் பொறுத்தவரையில் விலைவாசிக்குறைப்புவாரத்தில் ஆங்காங்கு நடைபெறும் ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் ஆகியவற்றில் கலந்துகொண்டு ஒத்துழைக்குமாறும் கேட்டுக் கொள்கிறோம்:

‘அறிவகம்’
சென்னை-13.
8-11-’59

என். வி. நடராசன்,
துணைப்பொதுச்செயலாளர் தி. மு. க.

★

இமயமலைச்....!

(6–ம பக்கத் தொடர்ச்சி)

வராலய ஊதாரித்தனம், பக்ரா நங்கல் ஓட்டை ஒடிசல் – அப்போதெல்லாம் வாய்மூடிமௌனியானீர். ஹிராகுட்டா தாமோதராம், துங்கபத்ரையாம் தண்ணீரா ஓடுகிறது. ஏழையின் இரத்தம் ஓடுகிறது? குடிக்கும் தண்ணீரில் அமெரிக்க டாலரின் வெள்ளியும், அருந்தும் உணவில் அமெரிக்க நோட்டின் பச்சையும், அடிக்கும் இரும்பில் இரஷ்ய ரூபிளின் சத்தமும் இருந்தால் சுயராஜ்யம் சுகராஜ்யமாகவா இருக்கும்!

நேரு : நாற்பது கோடி மக்களின் பிரச்சினை பத்தே ஆண்டுகளில் தீர்ந்துவிடுமா?

ஜவஹர் : உங்கள் கேள்வியேபிடிக்கவில்லை. பிறந்தநாள் விழாவை கொந்தளிப்பில் முடிக்கக்கூடாது. இருந்தாலும் எச்சரிக்கைக்காகச் சொல்கிறேன். நானும் நீங்களும்பிறந்துவளர்ந்த ஆனந்த பவனம் இருக்கும் அலகாபாத் நகரசபைத் தேர்தல் முடிவு நான்கு நாட்களுக்கு முன்பு வந்தது. 54 இடங்களில் 18 இடங்கள்தான் காங்கிரசுக்கு வெற்றி. நமது சொந்த ஊரில் செல்வாக்கு கரைந்துள்ள அளவு...!

நேரு : போதும் ! நிறுத்து! வேண்டவே வேண்டாம் !

[நேருவின் சிந்தனைச் சுழல்கிறது. ஓய்வுதேடி வந்த இடத்தில் உள்ளம் உலைக்களமாய் விட்டது: நேருவின் பூர்ண ஒய்வு என்று மறுநாள் தலைப்புக் கொடுக்க இருக்கும் பத்திரிகைகளை நினைத்தவுடன் பரிதாபச் சிரிப்பு உதட்டில் தவழ்ந்தது.]

ஆப்பிரிக்க ஆரண்யத்தில் அரும்பும் விடுதலைப்பூ!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தீர்ப்பு வழங்கப்பட்டு இருந்தார்கள்.

ஜூலியஸ் தனது விருப்பத்துக்கு மாறாக அபராதத்தைச் செலுத்திவிட்டு வந்தார். அப்போது அவர் ஏன் அப்படிச் செய்தார்? என்று வினவிய நண்பர்களுக்கு 'வரும் புதுக் கவர்னருக்கு எடுத்தவுடனேயே தொல்லைத்தர நான் விரும்பவில்லை. அவர் நம்மைப் புரிந்துக் கொள்ள அவகாசம் அளிப்போம், எனறு கூறினார். அவரது வாசகங்கள் பொய்ப்பித்துப் போய்விடவில்லை. மாறாக நல்ல பலன் அளித்தது. அந்தக் கவர்னரின் ஒன்பது மாத ஆட்சியில் இரண்டு தேர்தல்கள் நடைபெற்றன. எதிர்பார்த்தது போலவே தங்கநீகா ஆப்ரிக்கர் தேசியக் கழகத்தின் சார்பில் நிறுத்தப்பட்ட பத்து ஆப்பிரிக்கரும் வெற்றி பெற்றார்கள். அத்துடன் இவர்களால் ஆதரிக்கப பட்ட ஆசியாக்காரர்களும் வெள்ளைக்காரர்களும் என இருபது பேர் வெற்றிபெற்றனர். இந்தத் தேர்தலின் மூலம் இந்தஇயக்கத்திற்கு ஆப்பிரிக்க மக்கள் மட்டும் அல்லாமல், ஆசியருடையவும், வெள்ளையருடையவும், முழு ஆதரவையும் பெற்றுள்ளது என்பது வெளிப்படையாயிற்று. மற்றும், இந்த இயக்கத்தை நசுக்குவதற்கென்றே தோன்றியகூட்டு தங்க நீகா கட்சியும் படுதோல்வியுற்றது.

இந்தத் தேர்தலில் பெற்ற படிப்பினையின் காரணமாக, கவர்னர் ஜூலியஸ்சையும் அவரது இயக்கத்தையும் வெகுவாக மதிப்பளித்துத் தீரவேண்டி ஏற்பட்டது. தேர்தலுக்குப்பிறகு நிறுவிய அரசாங்க நிர்வாகசபையில் மூன்று ஆப்பிரிக்கர்களும், ஒரு ஐரோப்பியரும், ஒரு ஆசியாக்காரரும் இடம் பெற்றனர். அந்த நிர்வாக சபையில் ஜூலியஸ் தான் அங்கம் வகிக்க மறுத்துவிட்டார்.

இனி அடுத்து நடைபெற இருககும் தேர்தல் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்று குறித்து தங்க நீகா ஆப்பிரிக்க தேசியக் கழகம் சில திட்டங்களைத் தீட்டியுள்ளது.

அதன் தீர்மானங்களில், வரப்போகும் சட்டமன்றம் 82 அங்கத்தினர்களைக் கொண்டதாகவும், அதில் 79 பேர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களாகவும், அதில் 21 இடங்களில் பதின்மூன்று இடங்கள் ஆசியாக்காரர்கட்கும், எட்டு இடங்கள் வெள்ளையருக்கும் என்றும் மீதி இடங்கள் பொதுவாகவும் இருந்தல் வேண்டும் என்றும், கூறப்பட்டுள்ளது.

இதன்படி தேர்தல் நடைபெற்ற பிறகு ஆட்சிப் பீடத்தின், பாதுகாப்பு, வெளிவிவகாரம், சட்டத்துறை, தவிர மற்றவை யாவும் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களாலேயே நிர்வகிக்கப்பட வேண்டும், என்றும் அது வற்புறுத்தியுள்ளது. இதன்படி அதன் தலைவரான ஜூலியஸ் நியார்ரீ, படிப்படியாக சுதந்திரம் அடைதலைத் தெளிவாக்கியுள்ளார்கள்.

இன்றுவரையில் அந்தநாட்டில் ஒற்றுமை நிலவி வருகின்றது. அரசியலில், அடிதடியோ கலவரங்களோ இன்றி 'வோட்டு முறையிலேயே' நம்பிக்கை வைத்து அந்த நாட்டு அரசியல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

தங்கநீகாவில், ஆப்பிரிக்கரும், வெள்ளையரும், ஆசியாக்காரர்களும் ஒன்றுகூடிக் கேளிக்கைகளில் ஈடுபட்டுக்காலம் கழித்து வருகின்றார்கள், ஜூலியஸ் நியார்ரீயின் இயக்கத்தைச் சார்ந்த பச்சைச் சட்டையினர்' தங்களது பணியைத் தளராது செய்துகொண்டு வருகின்றனர்.

இவ்வளவு நல்ல முறையில் உள்ள நாட்டி[illegible]ரியாரின் தலையீட்டால் அ[illegible]து சுதந்திரத்தைத் தள்ளிப்போடும் நிகழ்ச்சிகள் தற்போது நடைபெறத் தொடங்கியுள்ளதாகத் தெரிகின்றது.

பச்சைப் பசேலென்ற காடுகளுக்கு மத்தியில், அமைதியான முறையில் நிறவேற்றுமை பிரளாமல், அருமையான அரசியலைக் கையாண்டு வோட்டு முறைக்கு' இன்றுவரை மதிப்பளித்துவரும் இயக்கத்துக்கு தற்போது சோதனையை உண்டாக்கும் தன்மையில் பிரிட்டன் காரியமாற்றத் தொடங்கியுள்ளது. இதை ஜூலியஸ் எப்படி சமாளிக்கப் போகின்றார் என்பதைத் உலகம் கூர்ந்துநோக்கிய வண்ணமுள்ளது அமைதிநிலவியநாட்டில் மக்கள் அநாவசியமான தொல்லைகளில் ஈடுபட்டுத்தான் தீர வேண்டுமா? என்பது இனி ஏற்படப்போகும் நிகழ்ச்சிகளை கொண்டே அறியமுடியும். பிரிட்டன் இதில் தனது நாணயமான சிரத்தையைக் கையாளுமேயானால் எந்த விதமான போராட்டமும் இன்றி, உலகில் சிறியநாடுகளுள் ஒன்றான 'தங்கநீகாவும்' சுதந்திரப் பாதையில் நடைபோடும்.

"கூட்டணி" அமைப்போம்!

★

"மத்திய அரசிடம் அதிகாரங்கள் குவிக்கப்படுவதன் தீமையை உணர்ந்து, ஒருமித்த கருத்துப்படைத்திருக்கும் எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்றுகூடி, மத்திய அரசிடமிருந்து அதிகாரங்களை மாநிலங்களுக்கு மாற்றத்தக்க வழிகளை மேற்கொள்ளும் முறையில் கூட்டணி அமைத்துச் செயலாற்ற வேண்டுகிறேன்.

"சுதந்திரா கட்சி, பொதுவுடைமைக்கட்சி, மக்கள் சமதர்மக் கட்சி, தமிழரசுக்கழகம் ஆகிய அரசியல் கட்சிகள் தி. மு. கழகம் கொண்டுள்ள கருத்துக்கு ஒருமித்த கருத்தையே கொண்டிருக்கின்றன. அதிகாரங்கள்டில்லியில்குவிக்கப்பட்டிருப்பதன் விளைவாக மத்திய அரசு சர்வாதிகாரத்திற்கு வழிகோலுகிறது என்ற கருத்தை அவர்களும் உணர்ந்துகூறுகிறார்கள் இத்தகைய நிலைமையில், ஏன் எல்லோரும் ஒன்றுகூடி இத் துறையில் தக்க பரிகாரத்தைக்காண வழிவகை தேடக்கூடாது? எல்லோரும் ஒன்றுகூடி மத்திய அரசிடம் இதுபற்றி வற்புறுத்தலாம்.

மத்திய அரசிடம் இத்தகைய கோரிக்கையை வற்புறுத்துவது நியாயமானதாகும் இத்தகைய கோரிக்கையை எவரும் எளிதில்ஏற்க மறுத்துவிடமுடியாது"

மதுரையில், அறிஞர் அண்ணா

இன்று நம்நிலை – எண்ணவே வெட்கக்கேடு!

பீ. மணிவேந்தன், பி. ஏ. (பச்சையப்பன் கல்லூரி, சென்னை)

எத்திடும் வடவர் நம்மை இகழ்ந்துமே நமது நாட்டின்
சொத்தினை யெல்லாம் மெள்ளச் சுரண்டியே செல்ல; இந்திப்
பித்தரின் பிடியி னின்று பிரித்திட வேண்டுந் தெற்கை;
இத்தகு பணியில் ஒன்றாய் இருந்திடல் என்றே சொல்வாய்?

கஞ்சியே இல்லை யென்று கதறிடுங் காட்சி யெங்கும்;
அஞ்சியே ஓடும் பேதை அடங்கிடும் ஆமை போன்றோர்;
மிஞ்சிடக் காண நாட்டை மீட்டிட தோழா! உன்றன்
நெஞ்சிலே உரத்தைப் பெற்று நிமிர்ந்துநீ வருவ தெந்நாள்?

சட்டத்தைக் காட்டி நம்மைச் சதிசெய நினைத்தே விட்டார்!
திட்டத்தில் திராவி டத்தைச் சிதைத்திட முடிவே செய்து
மட்டமாய் இன்று நம்மை மதிக்கிறார் தோழா அன்னோர்
கொட்டத்தை ஒடுக்கி, சூழ்ந்த கொடுமையைக் களைவோம் வாராய்!

ஆமையாய் இன்னும் வாழ்ந்தால் அருந்தமிழ் புதைந்தே போகும்!
ஊமையாய் இருந்தால் நாட்டின் ஊக்கமே மாண்டுபோகும்!
தீமையே புரியும் அத்தத் தீயவர் ஆட்சி ஒய
நாமென்றும் ஒன்றாய் நின்று நசுக்குவோம் வடவர் தம்மை!

அன்றுநம் முன்னோர் யார்க்கும் அஞ்சாது வாழ்ந்தார்; எங்கும்
வென்றுதம் கொடியை நாட்டி வெற்றியில் திளைத்தார்; அந்தோ!
இன்றுநம் நிலைமை என்ன? எண்ணவே வெட்கக்கேடு!
என்றுநம் அடிமை நீங்கும், இனவழி ஒன்று கூடும்?

பைந்தமிழே, நீ தகுதியில்லை !

அன்புத் தமிழே! கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திலேயே தோன்றிய மூத்தகுடியின் தாய் மொழியானாய்.

பஃறுளியாறும் குமரிக்கோடும் நின்மொழியை அகங்குளிரக் கேட்டிருக்கிறது.

சங்கப் புலவர்களும் தொல்காப்பியரும், திருவள்ளுவரும் உன்னத இலக்கியங்கள் உருவாக்கியது உன்னைக் கொண்டுதான்.

பாண்டிநாட்டு மன்னனின் பைங்கிளிப்பேடுகள், தமதுபாங்கிமார்கள் பந்தாடுகிற நேரத்தில் பேசிய செல்வமொழி தமிழ்.

சேரநாட்டு தளநாயகர் தமது பாசறை வீரர்களுக்கு போர்ப் பறை அறிவித்தது மறத் தமிழிலேதான் !

சோழமன்னர்களின் கொலு மண்டபததில் கொஞ்சி விளையாடியமொழி கன்னித் தமிழ் தான். அவர்தம் குமரிகள் கும்மியடித்ததும் கோலாட்டம் ஆடியதும் தமிழிலேதான். லத்தீன் மொழியிலேயல்ல. ஐப்பெருங்குழுவும் எண்பேராயமும் தமது நடவடிக்கைகளை நடத்தியது பாரசீகமொழியிலல்ல. தமிழ்மொர்ழியிலேதான்.

மாமலர் நெடுங்கண் மாதவி, கானல் வரி பாடியது பிரஞ்சு மொழியிலல்ல. கற்புக்கரசி கண்ணகி, பாண்டியனிடம் வழக்குரைத்தது ஜெர்மன் மொழியிலல்ல. தமிழகத்து காதலர்கள் மலர்ப்பூங்காவிலும், மலையடிவாரத்திலும், மாநதி ஓரத்திலும், சாலையிலும், சோலையிலும், அருவிக்கரையிலும், அம்சதூளிகா மஞ்சத்திலும் தங்கள் இதயதாபத்தை பேசியது சீனமொழியிலேயல்ல.

தமிழகத்து மருத்துவர்கள் மூலிகைகளின் குணம் எழுதியது சமஸ்கிருத மொழியிலே அல்ல.

நமது பண்டைய மாலுமிகளும் வர்த்தகர்களும் பேசியதுகிரேக்க மொழியிலே அல்ல.

இன்றைக்குநினைத்துக்கொண்டாலும் நம் நெஞ்சம் பெருமிதத்தால் விம்முகிறது. நமது அன்னை மொழி பெற்றிருந்த ஏற்றமும் அவனியில் நமது மூதாதை அதனாலே பெற்றபெருமையும் சாதாரணமானதல்ல.

வெற்றிக்கொடி மரம் சாய்ந்தது. தமிழ் மண் எத்தனையோ கணைகளுக்கு ஆளாகியது. பல நூற்றாண்டுகள் தோல்வி மேகம் நம்மை விடவில்லை. எத்தனை படையெடுப்புகளைத்தான்தாங்குவாள் தமிழ் மாதா? அவள் மேனி முழுதும் காயங்கள். இரத்தம் வடிந்தது. கண்களில் மல்கிய நீர் ஆடையை நனைத்தது. தனையருக்கு சொரணை பிறநதது.

எங்கள் தாயை அவமதித்த தருக்கரெங்கே? தரணியின் எந்தக்கோடியிலிருந்தாலும் விடோம், அவளின் மைந்தர்கள் கிளம்பிவிட்டோம். அவள் இனி அரியாசனத்தில் அமருவாள் என்று சூளுரைத்துக் கிளம்பினர்.

ஆலயங்களுக்குப்போனான். கோயில் மணி முழங்கியது. அர்ச்சனை ஆரம்பமாகியது. அந்நிய மொழியை புரோகிதர் உச்சரிக்கக் கண்டான். திருவாசகமும் தேவாரமும் திருவருட்பாவும் வீணாகத்தான் போயிற்று போல் தோன்றுகிறது. ஆண்டவனுக்குப்புரிந்திருக்காது என்று நொந்துகொண்டான்.

திருமணவீடு சென்றான். உற்றார், உறவினர் ஊர்பெரியவர் அத்தனைபேரும் தமிழில் பேசினர். ஆனால் மணவினைமட்டும் வேறு மொழியில் நடைபெற்றது.

இந்த இழவு எப்போது தொலைவது என்று ஆத்திரம் பொங்கியது. எதிரே இறப்பு ஊர்வலம் போய்க்கொண்டிருந்தது. இறப்பு வினைகளிலும் தமிழ் புறக்கணிக்கப்பட்டிருப்பதைக் கண்டான்.

பள்ளிக்குப் போனால் ஆங்கிலம் படிக்கச் சொன்னார்கள். வேலை வேண்டுமென்றால் ஆங்கிலத்தில் எவ்வளவு அறிவு என்று அத்தாட்சிப் பத்திரங்கள் கேட்டார்கள்.

பட்டுக்கோட்டையில் பக்தவத்சலம் !

இசை கேட்கலாமென்றால் தமிழைத்தவிர எல்லா மொழிகளிலும் தமிழ்நாட்டில் சங்கீதம் பொழிந்தது !

வெளியே கிளம்பினால் அங்காடிக்கடை விளம்பரப்பலகையில் தமிழைக்காணோம்.

புகைவண்டி நிலைய ஊர்ப் பெயர்ப்பலகையில் தமிழைக் காணோம்!

கடிதங்களில் காணோம்! அரசாங்க அறிவிப்புகளில் காணோம் செய்தித் தாட்களில் காணோம்.

நாமே காணாமல் போய்விடுவோமோ என்ற சந்தேகம் தமிழனைப் பிடித்து ஆட்டியது.

கவிழ்ந்துக்கொண்டிருக்கும் கப்பலில் பயணம் செய்வோருக்கு ஏற்படும் மரண 'தைரியம்' வந்தது. மரணத்தின் கடைசி எல்லையிலே தமிழர் சமுதாயம் விழித்தது. மொழிப்பற்று கரைபுரண்டது. மறுமலர்ச்சி உதயமாகியது.

தமிழரின் திருமண விழாக்களில் வேற்றுமொழி விடை பெற்றுக்கொண்டது.

தமிழரின் இசை விழாக்களில் தமிழ் களிநடனம் புகுந்தது.

தமிழிலே பேசுவோம், தமிழிலேயே எழுதுவோம், தமிழுக்கு அந்த தகுதிகள் உண்டு என்ற தன்னம்பிக்கை துளிர்த்தது. ஆலயங்களில் தமிழ் இருக்கட்டும். ஆட்சி அலுவலகங்களில் தமிழ் இருக்கட்டும், வழக்கு மன்றங்களில் தமிழ் இருக்கங்டும், பள்ளிகளில் தமிழ் இருக்கட்டும், பல்கலைக் கழகங்களில் தமிழ் இருக்கட்டும், பாட நூல்கள் தமிழில் இருக்கட்டும், அறிவியல், கலை நூல்கள் தமிழிலேயே பயிற்றுவிக்கப்படட்டும் என்ற கோரிக்கைகள் எழுந்தன.

இந்த நல்ல பணியில் ஈடுபட்டோர் நையாண்டி செய்யப்பட்டனர். மொழிவெறியர் என்று தூற்றப்பட்டனர். பல இழிவுகளையும் பழியையும் தமிழின் காவலர்களும தலைவர்களும் தாங்கிக்கொண்டனர்.

பலர் சிறை வாழ்வை மேற்கொள்ள வேண்டியிருந்தது. பாலகரும் தாய்மார்களும் கம்பிக்குப்பின்னால் கொட்டடிகளில் பூட்டப்பட்டனர், சிலர் தங்கள் இன்னுயிரையே ஈந்தனர்.

இன்று எந்த திக்கு நோக்கினும் தமிழ் மணம் கமழ்கிறது. தமிழால் ஆட்சி நடத்த முடியும், தமிழில் விஞ்ஞான நூல்களை உருவாக்கமுடியும், தமிழில் எத்தகைய நுண்ணிய பொருளையும் விளக்கமுடியும் என்ற பெருநிலை பிறந்திருக்கிறது.

அக்கிராசனர் இருந்த இடத்தில் தலைவரைக் காண்கிறோம்.

விவாக சுப முகூர்த்த பத்திரிகை இருந்த இடத்தில் திருமண விழா அழைப்பிதழைக் காண்கிறோம்.

ஸ்ரீமான், ஸ்ரீமதி. இருந்த இடத்தில் திருவாளர் திருமதியைக் காண்கிறோம். நாள்தோறும் வரும் செய்தித்தாட்கள், நகரமன்றங்களும் ஊராட்சி மன்றங்களும் இனி 'திருவாளர்' திருமதி என அழைக்க முடிவு செய்துள்ள தீர்மானங்களை வெளியிடத்தவறுவதில்லை.

சின்னாட்களுக்கு முன்பு ஸ்ரீமான் இருந்தாலென்ன ஸ்ரீமதி இருந்தாலென்ன என்ற கேலி செய்த நமது போலீஸ் அமைச்சர் கனம் பக்தவத்சலம், தமது தமிழ்ப் பகைமையை மேலும் கக்கியுள்ளார்.

நான்கு நாட்களுக்கு முன்பு பட்டுக்கோட்டை வழக்கறிஞர் கழக பொன்விழாவைத் துவக்கி வைத்த நேரத்தில் வழக்கு மன்றங்களில் தமிழை அவசரமாக அமுல் படுத்துவது நல்லதல்ல என்றும், தமிழில் பேசுவதனாலேயேகட்சிக் காரர்களுக்குபுரியுமென்றுசொல்லும்வாதம்தப்பானதென்றும் சட்ட நுணுக்கங்களைத் தெரிந்துகொள்ளும் அறிவாற்றல் பெற்றவர்மட்டுமே உணர முடியுமென்றும், தமிழிலே சொல்வதால் தெளிவாக, பொருள் சிதையாமல் சொல்ல முடியுமா என்பதில் தமக்குச் சந்தேகம் இருப்பதாகவும் தமிழில் நடத்துவதால் நீதி பிறழ்வதற்கு ஏது இருக்கிறதென்றும் அங்கலாய்த்துள்ளார்.

எப்படி இருக்கிறது அமைச்சரின் தமிழ்ப்பற்று என்று கேட்டுவிடாதீர்கள். இவர்கள் கையில் தமிழ் என்ன ஆகும் என்றும் யோசித்துவிடாதீர்கள்.

வழக்கு மன்றத்திற்கு தமிழ் சிக்கலாக இருந்தால், அதை என்றைக்காவது சமாளித்துத் தானே ஆக வேண்டும்? முடியாதா? கூடாதா? அதற்காக நடைமுறைக்கு வரக்கூடாதா? என்றெல்லாம் கேட்டுவிடாதீர்கள். அவர் அமைச்சர். நாம் சாமான்யர்கள். அவரின் தமிழ்ப்பற்றை சந்தேகிப்பதே தேசத் துரோகம்! பிரிவினையாளர் நாட்டுப்பற்றில்லாதவர்கள், குறுகிய மனோபாவம் படைத்தவர் என்றெல்லாம் பட்டப்பெயர்களைப் பெறுவீர்கள் ?

அதுவும் எங்கே அமைச்சர் தமிழில் வழக்கு மன்றங்களை நடத்த முடியாது என்று கூறியுள்ளார் என்று கருதுகிறீர்கள் ?

நூற்று நாற்பதுவருடங்களுக்கு மேலாக செயல்பட்டு வரும் பட்டுக்கோட்டை வழக்கு மன்றத்தில் தமிழிலேயே விசாரணைகள் நடந்தனவென்றும் பண்டிதர்கள் வக்கீல்களாக செயல்பட்டிருக்கிறார்கள் என்றும் நல்ல தமிழிலேயே கோர்ட் ஏடுகள் எழுதப்பட்டிருக்கின்றவென்றும் கூறப்பட்ட இடத்தில் திருவாய் மலர்ந்தருளியுள்ளார். தவறு என்று சொல்லிவிடாதீர்கள். உங்கள் மொழியறிவையே அமைச்சர் சந்தேகிப்பார்.

தென்னரசு நூல்கள்

குஞ்சரத்தின் கதை	1-75
நகமும் சதையும்	1-25
திருவாடனை கலவரம்	(அச்சில்)
அத்தான்	,,
காங்கிரஸ் கமலங்கள்	,,
தென்னரசு கதைகள்	,,

முத்து புத்தக நிலையம்

மேலப்புலிவார்டு ரோடு · · திருச்சி.

விமர்சனம்

பார்த்திபன் புரொடக்ஷன்ஸ் அளிக்கும் அருணா பிலிம்ஸ்

"அபலை அஞ்சுகம்"

'கல்கி' வார இதழில் தொடர் கதையாக வந்த பலர் படித்து ரசித்த கதை அபலை அஞ்சுகம்.

செய்யாத குற்றத்திற்காக சிறைசென்று அவதியுற்று நல் வாழ்வை எண்ணி ஏங்கி' துடிக்கும் அஞ்சுகம் ஜமீன் ஒன்றில் வேலைக்காரியாக வந்து சேருகிறாள். அங்கும் திருட்டுப்பட்டம் அவளை சுற்றி வட்டமிடுகிறது. அந்தப்பட்டப் பெயருக்கும் சிறை கம்பிகளுக்கும் பயந்து ஓடுகிறாள். அவள் காதலன் அவளை காப்பாற்றும் எண்ணத்தில் ஜமீனில் நுழைகிறான். சாகசக்காரி நிர்மலா அவனை வளைத்துக் கொண்டு அவன்தான் இளைய ஜமீன்தார் என்றுகூறி ஜமீனை ஆட்டிப் படைக்கிறாள். இறுதியில் அஞ்சுகம் நிரபராதிஎன்பது உணரப்பட்டு, நிர்மலாவுக்கு விலங்கிடப்படுகிறது.

அஞ்சுகமாக சௌகார் ஜானகி வருகிறார். அங்காடிப்பேட்டையின் நரக வாழ்விலிருந்து விடுபட்டு நல்ல வாழ்வு வாழவேண்டும் என்று துடிப்பது இயற்கையாக இருக்கிறது. குறத்தியாக வந்து ஆடிப்பாடுவது கவர்ச்சியாக இருக்கிறது. ஜமீனில் இரண்டாவது முறையாக திருட்டுப்பட்டம் கட்டும்போது நெஞ்சுருகத் துடிக்கிறார். உண்மையிலேயே அஞ்சுகம் அபலைதான் என்பதை தன் சிறந்த நடிப்பின் மூலம் வெளிப்படுத்துகிறார்.

மகாலிங்கம் — கதாநாயகன் இரட்டைவேடம். அங்காடிப் பேட்டை ரௌடியாக் வரும் போது வெளுத்து வாங்குகிறார். தன் காதலிக்காக தன் தொழிலையே விட்டுவிடும் இடம் நன்றாக இருக்கிறது.

நிர்மலாவாக எம். என். இராஜம் வருகிறார். சாகசத்தில் தேர்ந்த வில்லி. கடைசிவரை எதற்கும் கவலைப்படாமல் காலந் தள்ளுகிறார்.

படத்தில் முக்கிய பகுதியெல்லாம் குலதெய்வம் இராஜகோபாலும்; மனோரமாவும் வந்து சக்கைபோடு போடுகின்றனர். நகைச்சுவை பகுதியை திறம்பட கையாண்டுள்ளனர். படம்பார்ப்போரை சிரிக்கவைக்கும் பொருப்பு இந்த இருவருடையது. அங்காடிப்பேட்டை மொழியிலேயே பேசிக்கொள்ளும் டி. ஏ. மதுரத்தையும் மறந்து விட முடியாது.

வசனம் சுமார். படத்தின் முக்கால் பாகத்திற்கு மேல் 'சென்னை தமிழாக' இருக்கிறது.

'வெண்ணிலா குடைபிடிக்க' தாண்டி மீனே, என்ற இரண்டு பாடல்களும் இனிமையாக இருக்கின்றன.

படத்தின் ஒளிப்பதிவு நன்றாக அமைந்துள்ளது. ஒலிப்பதிவும் பாராட்டத்தக்கவிதத்தில்அமைந்துள்ளது.

டைரக்ஷன் தயாரிப்பு ஆர். எம். கிருஷ்ணசாமி. குறை எதுவும் சொல்ல முடியாதபடி படத்தைக் கொண்டு செல்லுகிறார். தமக்குப் பிடிக்காத நகைச்சுவை பகுதியை நிறைய சேர்த்ததால் இப்படத்தில் வெற்றி கண்டிருக்கிறார் டைரக்டர்.

தையற்கலை

மாதம் ஒருமுறை வெளிவருகின்றது

ஆசிரியர்: K. P. சுந்தரம்

ஆண்டு சந்தா—2.50. தனி இதழ் 20 N.P

1959 நவம்பர் மாதம் (7—வது) இதழில்

கால்சட்டை வெட்டும் புதுமுறை!

பில்ச் நிக்கர் வெட்டும் முறை!

வெட்டு வேலை - சித்திரத் தையல்!

சிங்கர் படமும், சிங்கர் நிருவனத்தின் வளர்ச்சியும்!

உடை வளர்ச்சியும் வரலாறும்!

மற்றும் பல செய்திகள்

விற்பனையாளர்கள் இல்லாத ஊர்களில் முன்பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

விவரங்கட்கு

தையற்கலை, சென்னை-7

இமயமலைச்சாரலிலே...!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரலாறு உருவாக்குவதற்கு வரலாற்றை உணர்ந்திருக்க வேண்டும். உலகமே இப்போது அழிவை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது, மனித குலத்தின் அவல நிலையைப்பார்த்தால் நள்ளிரவில்கூட எனக்கு தூக்கம் பிடிப்பதில்லை. நீயோ என்னைப் பிற்போக்குவாதி, விட்டுக் கொடுப்பவன் என்று குற்றம் சாட்டுகிறாய்! இவ்வளவு பேராபத்தையும் நினைத்தால், சர்வதேச அரங்கில் அரசியல் [illegible]திகளின் செயல் பிள்ளை விளையாட்டாகப் படுகிறது. நான் ஓர் இலட்சியவாதியாய் இருப்பதால் உலக அரங்கில் என்னைப்பார்த்து சிரிக்கிறார்கள். எனக்கு புரியாமலில்லை. விலைபோடத் தெரிந்த அரசியல்வாணிபர்கள்மதிப்பதில்லை. அதுவும் தெரிகிறது. இவன் என்ன இந்தியாவின் சாதாரண பிரதம மந்திரிதானே, இரஷ்யாவின் தலைவனா? அமெரிக்காவின் முதல்வனா என்ற அலட்சியம்! அதுகிடக்கட்டும். ஒரு சந்திரனுக்கோ நூறு சந்திரனுக்கோ நாம் போகலாம் ஆனால்மனிதகுலத்தின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு பரிகாரம் தேடாது, நடசத்திர மண்டலத்தைப் பார்த்துக் கொண்டுள்ளோம். புற்று நோயை போக்கவழி கண்டோமா? மரணக் கருவிகளை உற்பத்தி செய்கிறோம். இருக்கும் [illegible]ரைத் துடைக்க ஏதும் செய[illegible]லை. இந்த பைத்தியக்கா[illegible]ம் எப்போது குறையப்போகிறது என்பதிலே எனக்கு பெரும் கவலை.

ஜவஹர்: எப்போது பார்த்தாலும் உங்களுக்கு சர்வதேச அரசியலில்தான் கவலை. வெளிநாட்டுக் கொள்கையில் தான் கவனம், உள்நாட்டு விஷயங்களுக்காக கொஞ்சநேரம் சிந்தனையை ஒதுக்கினால் என்ன?

நேரு: எல்லோரையும் போலத்தான் நீயும் என்னை தவறாக புரிந்துகொண்டுள்ளாய்! உலக யுத்தம் என்றால் உலக முழுதும் அழிந்துவிடும். இந்தியா விதிவிலக்கல்ல. அதுமட்டுமல்ல. இப்போது உலகம் என்பது மிக நெருங்கிய கைப்பிடி அளவாகிவிட்டது. நமது மூதாதையரின் உலகம்வேறு. நாம் வாழும் உலகம்வேறு. உலகின் எதிர்காலத்திலிருந்து இந்தியாவின் எதிர்காலத்தை தனிமைப்படுத்த முடியாது. இதையெல்லாம் சொன்னால் சர்வதேச பண்டிதர் என்று சொல்லிவிடுகிறார்கள்.

ஜவஹர்: சரி, அது கிடக்கட்டும். சுயராஜ்யம் வந்து பனிரெண்டு ஆண்டுகள் ஆகிவிட்டது. தங்கள் ஆட்சியில் சாதாரண மக்க்ள் கண்டதென்ன? பெற்றதென்ன?

நேரு: என் உள்ளத்தை திறந்து சொல்லுகிறேன். நானே இந்தக் கேள்வியை நெடுநாளாகக்கேட்டுக்கொண்டிருக்கிறேன். இவனுக்கென்ன குறை, இங்கிலாந்து சென்றால் பக்கிங்காம் அரண்மனையில் விருந்து, அமெரிக்கா வாஷிங்டனில் வரவேற்பு, மாஸ்கோவில் உபசாரம், பீகிங்கில் வெற்றி வளைவுகள், நைல் நதி தீரத்தில் நட்புஉறவு, சிங்களக்கரையில் சிநேகிதர்கள் என்றுதான் கருதுவர். ஆனால் என் இதயம் தாங்க முடியாத வேதனையால் தவிப்பதை நான் யாரிடம் சொல்லி அழுவது. சுதந்திரப் போராட்ட காலத்தில் இருந்த உணர்வுகளை என்னால் பார்க்க முடியவில்லை. மக்கள் உணர்விழந்தவர்களாய், மாறி விட்டனர்,

ஜவஹர்: இல்லை, இல்லை தென்னகத்தில் ஓர் பெரும் விடுதலைப்படை தயாராகிறதாமே! அவர் தம் அணிவகுப்பு, செயல் திறன், தியாக உள்ளம் அத்தனையும் நமது அந்த நாளை நினைவுப் படுத்துகிறதாமே!

நேரு: அதுவெல்லாம் குறுகிய மாநிலப்பித்து. பிரிவினை நோய். புனிதமான சுதந்திரப் போராட்டத்தை அத்துடன் ஒப்பிடாதே!

ஜவஹர்: பொதுக் கூட்டத்தில் சொல்வதையே என்னிடம் ஒப்புவிக்கிறீர். கேட்டால் உள்ளத்தைத் திறந்து பேசுகிறேன் என்கிறீர். உங்களை சுற்றியுள்ளவர்கள்தான் சுயநலமிகளாய் விட்டனர். பதவி போதைஆட்டுகிறது. நாடு ஒன்றும் அவ்வளவு கெட்டுவிடவில்லை பெரும், பெரும் வணிகக் கோமான்கள், கோடீஸ்வர சீமான்கள் இவர்கள் புடைசூழ நின்று சோஷலிசம் என்று முழங்கினால் யார் தான் நம்புவார்கள்.

நேரு: என்மீதுமா நம்பிக்கை இருக்காது.

ஜவஹர்: அது வேறு விஷயம். நீங்களும் நானும் இருபது வருஷங்களுக்கு முன்பு பாபுஜிக்கு ஓர் கடிதம் எழுதினோம். உங்கள் சந்தேகத்திற்கு பதிலாக தான் கடிதத்தின் உதாரணம் கவனத்துக்கு வருகிறது. கடிதம் கவனமிருக்கிறதா "ஒருவன் எஞ்சின் டிரைவர் என்கிறான், நம்புகிறோம். ஆனால் அவனது எஞ்சின் மரத்தாலாகியது. அதை மாடுதான் இழுக்கும் என்று சொன்னால் அந்த எத்தனைப் பற்றி என்சின் டிரைவர் என்று சொல்ல முடியுமா? அதுபோலத் தான் மேலோட்டமாக சோஷலிசம்எனமுழங்கிவிட்டுபலர்வேறு வியாக்கியானம் கூறுகின்றனர்" என்று எழுதினோமே, அது தங்கள் கூட்டுத் தோழர்களுக்கு பெருந்தாது என்று கருதுகிறீர்கள். எத்தனைபேர் மனதார நம்புபவர்கள் என்று கருதுகிறீர்கள்.

நேரு: ஜவஹர்! நீ கேலியே செய்யத் தொடங்கிவிட்டாய்!

ஜவஹர்: உங்களைக் கேலி செய்தாலென்ன, என்னை நானே கேலி செய்துகொண்டாலென்ன இரண்டும் ஒன்றுதான்! நிலைமையைச் சொன்னேன். கொஞ்சம் தைரியமாய் சொல்லுகிறேன்.

இப்போதெல்லாம் நீர்கோழையாகிவிட்டீர். எங்கோ ஓடி ஒளிந்தது உமது ஆர்ப்பரிப்பு, அஞ்சா நெஞ்சம்! முந்திரா ஊழல், தூது

(5-ம் பக்கம் பார்க்க)

அச்சிடுபவர்: கே. இராசாராம், பி.ஏ., கஸ்தூரி வித்தோ ஓர்க்ஸ், 34, சின்னத்தம்பி தெரு, சென்னை-1.
ஆசிரியரும், வெளியிடுபவரும்: கே. ஏ. மதியழகன், பி.ஏ., 126, மவுண்ட் ரோடு, சென்னை-6.